வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி: 19.02.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

சத்ரபதி சிவாஜி மகாராஜ் பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையராக திரு. கியானேஷ் குமார், இன்று பொறுப்பேற்றுள்ளார்.

இந்திய பொருளாதாரம் பற்றிய தரவுகளை மக்கள் எளிதில் அறிந்து கொள்ள ஏதுவாக, மொபைல் செயலி ஒன்றை, ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தி உள்ளது.

புதுச்சேரியில், உடல் உறுப்பு தானம் செய்வோருக்கு, அரசு மரியாதை செலுத்தப்படும் என, மாநில அரசு அறிவித்துள்ளது.

---------------------------

*சத்ரபதி சிவாஜி* 1 (16)

முகலாயர் ஆட்சிக்கு எதிராக போராடி, மராட்டிய சாம்ராஜியத்தை நிறுவிய சத்ரபதி சிவாஜி மகாராஜ் பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். சத்ரபதி சிவாஜியின் வீரமும், தொலை நோக்குப் பார்வைகளுமே, துணிச்சல் மற்றும் நீதியை நிலை நாட்டி, சுயராஜ்ய சிந்தனைக்கும் அடிகோலியதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், பிரதமர் கூறியுள்ளார். வலுவான, வளமான, சுயசார்பு

இந்தியா ஒன்றை உருவாக்குவதில், இன்று வரை மக்களுக்கு ஊக்கமாகத் திகழ்வதும் சத்ரபதி சிவாஜிதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிவாஜி மகராஜின் 395ஆம் ஆண்டு பிறந்த நாளை ஒட்டி, இன்று, மஹாராஷ்ட்ர மாநிலம் நாக்பூரில் இன்று காலை நடைபெற்ற, **ஜெய் சிவாஜி-ஜெய்** பாரத் பேரணியில், மாநில அமைச்சர் திரு. சந்திரசேகர் பவன்குலே உட்பட பலர் கலந்து கொண்டனர். பேரணியில் பங்கேற்ற இளைஞர்கள், **மல்லகம்பம்** போன்ற பாரம்பரிய விளையாட்டுகளையும், **தண்ட பட்டா வாள் வீச்சு** போன்ற வீர சாகசங்களையும் நிகழ்த்திக் காட்டினர். சத்ரபதி சிவாஜியின் வீரத்தையும், வரலாறு குறித்து, பல்வேறு இடங்களில் நாடகங்கள், மற்றும், உரை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**---------------------------**

*டெல்லி-பிஜேபி* (8)

டெல்லியில், சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் சட்டமன்றக் குழுக் கூட்டம், இன்று மாலை நடைபெறுகிறது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிஜேபி எம்எல்ஏக்களும், கட்சி மேலிட பார்வையாளர்களாக, பிஜேபி தேசிய செயலர் திரு. ஓம் பிரகாஷ் தன்கர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் ஆகியோரும், இக்கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். அடுத்த டெல்லி முதலமைச்சர் யார் என்பது, கூட்டத்தில் தீர்மானிக்கப் படுகிறது. புதிய டெல்லி முதலமைச்சரின் பதவியேற்பு விழா, டெல்லி ராம் லீலா மைதானத்தில் நாளை நடைபெறும்.

**---------------------------**

*பிரயாக் – கும்பமேளா* (10)

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில் இதுவரை, 56 கோடியே 12 லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர். திரிவேணி சங்கமத்தின் கரையில் அமைந்துள்ள பழமையான படே ஹனுமான் கோவிலும், பெரும் எண்ணிக்கையில் பக்தர்களை ஈர்த்து வருகிறது. இதற்கிடையே, உத்தரபிரதேசத்தில், மொத்தம் 75 சிறைகளில் உள்ள சுமார் 90 ஆயிரம் கைதிகளும், மஹா

கும்பமேளாவில் பங்கெடுப்பதை குறிக்கும் வகையில், திரிவேணி சங்கமத்தில் இருந்து அனைத்து சிறைகளுக்கும் புனித நீர் எடுத்து வர, முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மேற்பார்வையின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாக, சிறைத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------------

*தமிழ் சங்கமம் (5)*

வாரணாசியில், 3ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள தமிழகக் குழுவினர், கங்கை நதியில் புனித நீராடி, பழங்கால கோவில்களில் வழிபாடு நடத்தினர். மாணாக்கர் பிரிவின் கீழ், காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள சென்னை மாணவி ஸ்ரீமதி, தமது அனுபவங்கள் குறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில்......

(வாய்ஸ்)

---------------------------

*தேர்தல் ஆணையர் (8)*

தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட திரு. கியானேஷ் குமார், புதுடெல்லி நிர்வாச்சன் சதனில், இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். தேசத்தை உருவாக்கும் பணிகளில், முதல்படியே வாக்களிப்புதான் என்றும், 18 வயது பூர்த்தியான அனைத்து குடிமக்களும், வாக்காளராக பதிவு பெற்று, தவறாமல் வாக்களித்தல் அவசியம் என்றும், அவர் தமது செய்தியில் கூறியுள்ளார். நேற்று பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்த திரு. ராஜீவ் குமாருக்கு பதிலாக, திரு. கியானேஷ் குமார், தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியை ஏற்றுள்ளார்.

---------------------------

*ஆர்பிஐ செயலி (14)*

இந்திய பொருளாதாரத்தின் பருமநிலை மற்றும் நுண்நிலை பொருளியல் தரவுகளை மக்கள் எளிதில் அறிந்து கொள்ள ஏதுவாக, RBI-DATA என்னும் மொபைல் செயலி ஒன்றை ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த செயலியில், 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருளியல்

தரவுகள், பட்டியலாகவும், வரைபட வடிவிலும், வெளியிடப்படுகின்றன. பகுப்பாய்வுத் தேவை உள்ளவர்கள், தரவுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் செயலியில் இடம்பெற்றுள்ளது. பயனர்கள் தங்களின் இடத்தில் இருந்தே, 20 கிலோ மீட்டர் சுற்றுப் பரப்பில் உள்ள வங்கி வசதிகளை எளிதில் அறிந்து கொள்ளவும், இந்த செயலியை பயன்படுத்தலாம். இதுஅல்லாது, சார்க் நாடுகளின் பொருளாதாரத் தரவுகளை அறிந்து கொள்வதற்கான இணைய இணைப்புகளும் இடம்பெற்றுள்ளதால், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் உட்பட அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக RBI-DATA செயலி அமையும் என்றும், ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

---------------------------

*உறுப்பு தானம்* (9)

புதுச்சேரியில், உடல் உறுப்பு தானம் செய்வோருக்கு, அரசு மரியாதை செலுத்தப்படும் என, மாநில அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர். ரவிச்சந்திரன் கூறுகையில், யார் ஒருவர் இறந்த பின்பு உடல் உறுப்புகளை தானம் செய்கிறார்களோ,அவர்களின் வீட்டிற்கு மாவட்ட ஆட்சியர் சென்று, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார் என்றும், குடியரசு தினம், மற்றும், சுதந்திர தின விழாவின் போது, துணை நிலை ஆளுநர் அல்லது முதலமைச்சர் மூலம், சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் கவுரவிக்கப் படுவார்கள் என்றும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்)

---------------------------

*புதுச்சேரி மின்துறை* (10)

புதுச்சேரி மின்துறையில் காலியாக உள்ள எல்லா பதவிகளையும் நிரப்ப வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, மின்துறை பொறியாளர்கள் மற்றும், தொழிலாளர்கள் நலச் சங்கத்தின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர், இன்று மின்துறை தலைமை அலுவலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மின்துறை

பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் அனைத்து பதவிகளையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும், பணியின் போது உயிரிழந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு, ஒருமுறை தளர்வு மூலம், கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டும் என்றும் இப்போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.

---------------------------

*ஏனாம் (7)*

ஏனாமில், சுமார் 5 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும், வெங்கடேஸ்வரர் கோவில் புனரமைப்புப் பணிகளை, திருமலா-திருப்பதி தேவஸ்தான பொறியாளர்கள், இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பணிகளை பூர்த்தி செய்ய ஏதுவாக, மேலும் ஒருகட்ட நிதி ஒதுக்கீடு செய்யுமாறு, தேவஸ்தான வாரியத்தை தாம் கேட்டுக் கொள்ள இருப்பதாக, புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் தெரிவித்துள்ளார்.

---------------------------

*சாமிநாத அய்யர் (10)*

இன்று தமிழ் தாத்தா உ.வே சாமிநாத அய்யரின் 171ஆம் ஆண்டு பிறந்தநாளை ஒட்டி, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். பழங்கால ஓலைச் சுவடிகளை சேகரித்து அச்சிலேற்றியதன் மூலம், தமிழ் மொழிக்கு சாமிநாத அய்யர் ஆற்றிய அரும் பணியை, போற்றுவோம் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். இன்றைய தினம், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகவும் கொண்டாடப் படுவதை ஒட்டி, சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் உள்ள, உவே சாமிநாத அய்யரின் திருவுருவப் படத்திற்கு, தமிழக அமைச்சர்கள் திரு. தங்கம் தென்னரசு, திரு. மு.பெ. சாமிநாதன் உள்ளிட்டோர், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

---------------------------

*பழங்குடியினர் (13)*

பழங்குடி சமூகத்தினரின் மொழி, பாரம்பரியம், மற்றும், கலாச்சாரத்தை பாதுகாக்க இளைஞர்கள் முன்வர வேண்டும் என, தேசிய பழங்குடியினர் ஆணையத்தின் தலைவர் திரு. அந்தர் சிங் ஆர்யா அழைப்பு விடுத்துள்ளார். இதற்கென. இளைஞர்களுக்கான ஜன் ஜாக்ரண்-விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தாங்கள் நடத்தி வருவதாக, அவர் இன்று புதுடெல்லியில், ஆணையத்தின் 22ஆம் ஆண்டு நிறுவன நாள் விழாவில் பேசுகையில் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின், தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தை ஆணையம் தீவிரமாக அமல்படுத்தி வருவதாகவும், ஆணைய உறுப்பினர்கள், எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், மரக்கன்றுகளை நட முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். நிலம்-நீர்-காடு என்னும் பழங்குடி சமூகத்தினரின் நோக்கங்களுக்கு முற்றிலும் ஏற்றதாக இந்த இயக்கம் அமைந்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

---------------------------

*விண்வெளி – ஜிதேந்திரா (14)*

விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், மற்ற நாடுகளை முந்திச் செல்லும் நாடாக இந்தியா தற்போது மேம்பட்டு உள்ளதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். விண்வெளியில் வைத்தே செயற்கைக் கோளை ஒருங்கிணைக்கும் வகையிலான SpaDeX தொழில்நுட்பத்தில், இந்தியாவிற்கு கிடைத்துள்ள வெற்றியே இதற்கு சான்றாகும் என்று, வலை ஒலிப்பதிவு நிகழ்ச்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறினார். செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதில், உலக நாடுகளின் நம்பிக்கைக்குரிய நாடாக இந்தியா திகழ்வதாகவும், இதுவரை, 433 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள், இந்தியாவில் இருந்து விண்ணில் செலுத்தப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். நிலவின் தென் துருவத்தை ஆராய்ந்து, இந்தியா வெளியிடும் கண்டுபிடிப்புகளுக்காக, நாசா போன்ற, உலகின் முன்னணி விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகளே காத்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

--------------------------

*ஊரக மக்கள்* (14)

கிராமப்புற மக்களின் வாழ்க்கையை எளிதாக்க, புரட்சிகரமான முன் முயற்சிகளை அரசு மேற்கொண்டு உள்ளதாகவும், இதன்மூலம், நாட்டின் பொருளாதாரத்திற்கே, புதிய உத்வேகம் கிடைத்து இருப்பதாகவும், மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஆசிய-ஆப்ரிக்க ஊரக வளர்ச்சி அமைப்பின் 77ஆவது செயற்குழு அமர்வை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். உணவு உற்பத்தியில் இந்தியா சுயசார்பை எட்டி இருப்பதுடன், பிற நாடுகளுக்கும் உணவு தானியங்களை வழங்கி உதவுவதாக அமைச்சர் தெரிவித்தார். தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 10 கோடி பெண்கள், 90 லட்சம் சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு, மொத்தம் 50 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், 1 கோடியே 25 லட்சம் பெண்கள், லட்சாதிபதிகளாக மேம்பட்டு இருப்பது பெருமைக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

**சத்ரபதி சிவாஜி மகாராஜ்** பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையராக **திரு. கியானேஷ் குமார்**, இன்று பொறுப்பேற்றுள்ளார்.

இந்திய பொருளாதாரம் பற்றிய தரவுகளை மக்கள் எளிதில் அறிந்து கொள்ள ஏதுவாக, **மொபைல் செயலி** ஒன்றை, ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தி உள்ளது.

புதுச்சேரியில், உடல் உறுப்பு தானம் செய்வோருக்கு, அரசு மரியாதை செலுத்தப்படும் என, மாநில அரசு அறிவித்துள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**